**சார்பு நீதிமன்றம், அருப்புக்கோட்டை.**

**O.S.No: 33/2019 தேதி: 06.08.2025**

**வா.சா. 1 – சீனிவாசன்**

**<u>பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி :</u>**

சர்வே எண்.636/5–ல் உள்ள விஸ்தீரணம் எவ்வளவு என்றால் 6 ஏக்கர் 7 சென்ட் ஆகும். சர்வே எண்.636/5–ல் உள்ள உட்பிரிவுகள் எத்தனை என்றால் தற்பொழுது 2 உட்பிரிவுகள் உள்ளன. உட்பிரிவு செய்யப்பட்ட விவரம் எனக்கு 2018–ல் தான் தெரியும். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.2 நான் எனது சகோதரர்களுக்கு எழுதிக் கொடுத்த கிரையம் ஆவணம் என்றால் சரிதான். வா.சா.ஆ.2 உள்ள சர்வே எண்கள் என்ன என்றால், 636/5 என பொதுவாக சொல்லப்பட்டுள்ளது. வா.சா.ஆ.2 உள்ள சர்வே எண் 636/5 தற்போது யார் பெயரில் பட்டா உள்ளது என்றால் திருவேங்கடம்மாள் பெயரில் பட்டா உள்ளது. வா.சா.ஆ.2–ல் உள்ள சொத்திற்கு அனுபவத்தை காட்டுவது சம்பந்தமாக நில வரி ஏதும் செலுத்தப்பட்டுள்ளதா என்றால் செலுத்தப்பட்டுள்ளது. யார் பெயரில் செலுத்தப்பட்டுள்ளது என்றால் பட்டாதாரர் ஆழ்வாரம்மாள் மற்றும் திருவேங்கடம்மாள் பெயரில் செலுத்தப்பட்டுள்ளது. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1–ல் உள்ள சொத்திற்கு தற்போது யார் பெயரில் பட்டா உள்ளது என்றால் ஆழ்வாரம்மாள் பெயரில் பட்டா உள்ளது. வா.சா.ஆ.1–ல் உள்ள சொத்திற்கு அனுபவத்தை காட்டுவது சம்பந்தமாக நில வரி ஏதும் செலுத்தப்பட்டுள்ளதா என்றால் செலுத்தப்பட்டுள்ளது. பிராதில் நான் சொல்லியுள்ள சொத்தின் புல எண்.636/5A ஆகும். புல எண்.636/5A தற்போது யார் பெயரில் பட்டா உள்ளது என்றால் பிரதிவாதி பெயரில் உள்ளது என்று எனக்கு 2018–ல் தான் தெரிய வந்தது. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.4 ஆவணத்தில் உள்ள சொத்துக்களுக்குண்டான பட்டா இணைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் தவறுதலாக இணைக்கப்பட்டுள்ளது. வா.சா.ஆ.4–ல்

தாவா சொத்தின் புல எண் காட்டப்படவில்லை என்றால் சரிதான். சொத்து விவரம் மற்றும் நான்குமால் காட்டப்பட்டுள்ளது. வா.சா.ஆ.4-ல் தாவா சொத்திற்குரிய பட்டா எதுவும் ஆஜர்படுத்தப்படவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வா.சா.ஆ.4 உண்டான காலத்தில் தாவா சொத்திற்கு பட்டா பிரதிவாதி பெயரில் இருந்தது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வா.சா.ஆ.4 ஆவணத்தின் மூலம் தாவா சொத்து எனக்கு உரிமையானது அல்ல என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.4-ல் தாவா சொத்தின் புல எண் தவறுதலாக உள்ள விவரம் எனக்கு 2018-ல் தெரிய வந்தது. மேற்படி தவறை சரி செய்வதற்கு சீர்திருத்தப்பத்திரம் போடப்பட்டதா என்றால் 2019-ல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. தாவா சொத்து பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. தாவா சொத்தை பிரதிவாதி கிரையம் வாங்கியதை அடுத்து, அவர் பெயருக்கு பட்டா பெற்று, அனுபவித்து வருகிறார் என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தை நானோ, எனது தந்தையோ அல்லது கோவிந்தராஜனோ அனுபவித்து வருவதற்கு எந்த ஒரு ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தில் எங்களுக்கோ, எனது தந்தைக்கோ அல்லது கோவிந்தராஜனுக்கோ எந்த காலத்திலும், யாதொரு அனுபவமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.4-ல் உள்ள சொத்துக்களுக்கு எங்கள் பெயரில் பட்டா மாற்றுவதற்கு எனது தந்தை பட்டா மாறுதல் மனுவும் கொடுத்துள்ளதாக ஆவணத்தில் ஷரத்துக்கள் சொல்லப்பட்டுள்ளது என்றால் பொதுவாக சொல்லப்பட்டுள்ளது. பட்டா மாறுதலுக்கு நான் தான் மனு கொடுத்தேன். வா.சா.ஆ.4-ல் உள்ள சொத்துக்களுக்கு என் பெயரில் பட்டா மாற்றம் செய்யப்பட்டதா என்றால் மாற்றம் செய்யப்பட்டது. தாவா சொத்திற்கு என் பெயருக்கு பட்டா மாறவில்லை என்று சொன்னால் மனு கொடுத்த பொழுதுதான் பிரதிவாதி பெயரில் பட்டா இருந்தது தெரியவந்தது. தாவா சொத்தில் சட்ட காலத்திற்கு உள்ளாக எங்களுக்கு எந்த அனுபவமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தை பிரதிவாதி நிறுவனம் முன் நீதிமன்ற

தீர்ப்புகளை பற்றி தெரியாமல் சரியான பிரதி பிரயோஜனம் கொடுத்து கிரையம் பெற்று அனுபவித்து வருகிறார்கள் என்று சொன்னால் சரியல்ல. வழக்கு தாக்கல் செய்து எனக்கும் தெரிந்த, வெளிப்படையான எதிரிடை அனுபவத்தின் மூலம், தாவா சொத்து பிரதிவாதிக்கு முழு உரிமையானது என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தில் எனக்கு எந்த உரிமையும் இல்லை என்றும், நான் கேட்ட பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றும் சொன்னால் சரியல்ல.

என்னால் திறந்த நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

சார்பு நீதிபதி,
அருப்புக்கோட்டை.